2. தகவல் கோரல்

(அ) காட்டு யானைகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கும் பயிர்ச் சேதங்களுக்கும் இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர், குன்னூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை பகுதி, ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் இதுபோன்ற பகுதிகளில் காட்டு யானைகள் தாக்குதலால் கடந்த ஆண்டு 10 பேர் உயிரிழந்துள்ளார்கள். வால்பாறை பகுதியில் 4 பேர் உயிரிழந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒன்றரை இலட்சம் ரூபாயாக இருந்த இழப்பீட்டுத் தொகையை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருப்பதுடன், பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரால். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கவனியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகழிகள் வெட்டுவதற்கான முறையிலும், வால்பாறை பகுதி அதேபோல தொண்டாமுத்தூர் பகுதியில் நிதிகளை ஒதுக்கி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதொடர்ச்சியாக இந்தப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய தொடர் நிகழ்வாக இருக்கிற காரணத்தாலே, இதுசம்பந்தமாக எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படாத வகையில் ஒரு சிறப்புத் திட்டமாக யானைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யானை தாக்கி இறந்தவர்கள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வர மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு யாராவது இருந்தால், அவர்கள் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.*

[2012 ஏப்ரல் 26

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் வட்டம் கல்வராயன்மலை அடிவாரத்தில் புளியங்கோட்டை கிராமத்தில் யானை தாக்கி கோவிந்தன் என்பவர் உயிர் இழந்திருக்கிறார். மேலும், செம்பராம்பட்டு, பூட்டைமல்லாபுரம் பகுதிகளில் கரும்பு, வாழை போன்ற பயிர்களை யானைகள் நாசம் செய்திருக்கின்றன. அந்த மக்கள் பதற்றத்தோடு இருக்கிறார்கள் என்பதனை அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் இதே பிரச்சினை பற்றிப் பேசப் போகிறீர்களா? வேறு பிரச்சினை என்றால் அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட நாகனேரி காட்டுப் பகுதியில் யானைகளால் விவசாயப் பயிர்களும் சேதமடைந்திருக்கின்றன; மனித உயிர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு போதிய நிவாரணம் வழங்கவேண்டும் என்று கோருகின்றபோது, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட காலதாமதம் ஆகிறது. ஆகவே, அரசு விரைந்து உதவிகள் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், யானைகள் குறித்த பிரச்சினையா? கட்சிக்கு ஒருவர்தான், Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தினம் பத்திரிகை செய்திகளில்கூட பார்த்திருப்பீர்கள். என்னுடைய தலைவர் தொகுதியான ரிஷிவந்தியத்திலும் யானை தாக்கி இறந்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு நபர்கள் இறந்திருக்கின்றார்கள். இதைவிட, யானை சாத்தனூர் டேம் பக்கத்திலேயே குடிகொண்டிருக்கிறது. அதை விரட்டும்படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யானை அங்கேயே குடியிருக்கிறதா? (சிரிப்பு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 26]

***மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையிலிருந்து ஏழு காட்டு யானைகள் கூட்டம் ஒன்று பெண்ணையாறு காப்புக் காட்டில் அமைந்துள்ள சாத்தனூர் அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் கடந்த 5 நாட்களாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக, திருவண்ணாமலை வனக் கோட்டத்தைச் சார்ந்த சாத்தனூர் அணை வனச் சரக அலுவலர், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் தானிப்பாடி வனச் சரகர் ஆகியோர் தலைமையிலும், ஆயுதப் படைக் காவலர்கள் உள்ளிட்ட காவல் துறை அலுவலர்கள் தலைமையிலும் தனித் தனிக் குழுவாக இருந்து மேற்படி பெண்ணையாறு காப்புக் காட்டை ஒட்டியுள்ள அரியாகுஞ்சூர், சாமந்திபுரம், பொன்னித்தாண்டா, ரெட்டியார்பாளையம் ஆகிய பகுதி மக்களுக்கு காட்டு யானைகள் நடமாட்டம் குறித்த எச்சரிக்கையும், விழிப்புணர்வும், தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 23–4–2012 ஆம் தேதி இரவு சுமார் 9–30 மணி அளவில் ரெட்டியார்பாளையம் கிராமம் அருகே யானைகள் பாதுகாப்புப் பணியில் இருந்த அலுவலர்களின், யானைகள் நடமாட்டம் குறித்த எச்சரிக்கைகளையும் மீறி திரு. ராமன், த/பெ. குப்புசாமி, வயது சுமார் 50, ரெட்டியார்பாளையம் கிராமம், தண்டராம்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் பெண்ணையாறு காப்புக் காட்டிற்கு அருகே இருந்த ஓடைக்குச் சென்று குளித்துவிட்டுத் திரும்பி வந்தபோது மேற்படி காப்புக் காட்டைவிட்டு வெளியே வந்த யானைகளால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அதனைத் தொடர்ந்து மேற்படி யானைகள் ரெட்டியார்பாளையம் கிராமத்தைவிட்டு, திருவண்ணாமலை அரூர் சாலையைக் கடந்து தெற்குப் பக்கமாக சின்னையன்பேட்டை, உடையார்குப்பம், சகையாபுரம், கல்நாட்டுப் புதூர், நீர்குன்னி ஆகிய கிராமங்களைக் கடந்து இராயண்டபுரம் காப்புக் காட்டில் நுழைந்தன. அப்போது நீர்குன்னி கிராமத்தில் சுவாமிமலை காப்புக் காடு நுழையும் இடத்தில் காப்புக் காட்டிற்கு வெளியே சுமார் 10 அடி தூரத்தில் காட்டுக் கொட்டகையில் படுத்திருந்த திரு. கண்ணன், த/பெ. குள்ளுக்குட்டி, வயது சுமார் 75, அருவங்காடு கிராமம், தண்டராம்பட்டு வட்டம் என்பவரை, யானைகள் 24–4–2012 ஆம் தேதி அதிகாலை சுமார் 5–00 மணியளவில் தாக்கியதால் அந்த இடத்திலேயே அவர் இறந்துள்ளார்.

யானைகள் தாக்கி இறந்த இரண்டு பேரின் குடும்பங்களுக்கு, முதற்கட்ட நிவாரணமாக தலா ரூ.25,000 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி மீதம் உள்ள ரூ.2.75 இலட்சம் நிவாரணம் விரைவில் வழங்கப்படும். இந்த யானைகள் கூட்டம் நேற்று மாலை திருவண்ணாமலை வனக் கோட்டம், சுவாமிமலை காப்புக் காடுகளில் முகாமிட்டு இருந்தன. அவை தொடர்ந்து விழுப்புரம் வன மண்டலம், விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலையை உள்ளடக்கிய கள்ளக்குறிச்சி வனக் கோட்டம், கள்ளக்குறிச்சி வனச் சரகம், சங்கராபுரம் பிரிவு பவுஞ்சிப்பட்டு பீட், பவுஞ்சிப்பட்டு காப்புக் காடுகளில் முதன்முறையாக நுழைந்தன. இதனைத் தொடர்ந்து மாவட்ட வன அலுவலர், கள்ளக்குறிச்சி தலைமையில் இரண்டு வனக் குழுக்கள் அமைக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு காவல் துறை பணியாளர்களும் இரவு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் முன்னிரவில் சங்கராபுரம் தாலுகா, புளியன்கோட்டை கிராமப் பகுதிகளில் உள்ள விளைநிலங்களில் சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் யானைகளால் உட்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் விளைநிலங்கள் மற்றும் கிராமங்களில் புகுந்த யானைக் கூட்டத்தை விரட்டும் முயற்சியில் ஈடுபட்ட புளியங்கோட்டை கிராமம், திரு. கோவிந்தன், வயது 30, தகப்பன் பெயர் திரு. சடையன் என்பவர் யானைகளால் தாக்கப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் வழியில் 24–4–2012 அன்று இரவு உயிரிழந்துள்ளார். காட்டு யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்த திரு. எஸ். கோவிந்தன் அவர்கள் குடும்பத்திற்கும் உடனடி நிவாரணமான வனத் துறை தொகுப்பு நிதியிலிருந்து ரூ.25,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அவர்களின் உத்தரவின்படி கோவை மண்டலத்திலிருந்து பயிற்சி பெற்ற மலைவாழ் மக்கள் குழுவினரை வரவழைத்து மீண்டும் யானைக் கூட்டத்தை திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதிக்குப் பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த யானைகள் கூட்டம், நெடுஞ்சாலைப் பணிகள் போன்ற பணிகள் நடைபெறுவதால், தாங்கள் பரம்பரையாக வாழ்ந்துவந்த ஓசூர் பகுதி வாழ்விடங்களைவிட்டு வெளியே வந்து ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைப் பகுதியைச் சார்ந்த திருவண்ணாமலை, திருப்பத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள காப்புக் காடுகளில் சுற்றித் திரிகின்றன. கடுமையான கோடை நிலவுவதால் சில நேரங்களில் குடிநீருக்காகவும் விவசாயிகளின் பயிர்களுக்காகவும் வெளியே வருகின்றன.

2012 ஏப்ரல் 26] [திரு. கே.டி. பச்சைமால்]

முற்பகல் 10—55

யானைகள் வரும் அபாய நேரம் மற்றும் இடம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அங்கு வரவேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றனர். இருப்பினும் சிலர் விவரம் தெரியாமல் அப்பகுதிகளுக்கு வந்துவிடுவதால் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன. ஆகஸ்ட் 2011 முதல், இதுபோன்ற உயிரிழப்புகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.1.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்குவதற்காக ஆணையிட்டு, இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்காக கடந்த காலங்களில் கொடுக்கப்பட்ட நிவாரணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/—லிருந்து ரூ.25,000/—ஆகக் கொடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல இந்த நிவாரணங்களுக்கெல்லாம் உடனுக்குடன் நிதி உதவி வழங்க ரூ.2.5 கோடிக்கு ஒரு சிறப்பு நிதி தலைமை வனப் பாதுகாவலருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர அகழிகள் வெட்டுவது, மின் வேலிகள் அமைப்பது, காட்டுப் பகுதிகளில் தீவனப் பயிர்களை அதிகரிப்பது, குடிநீருக்கான வசதிகளை மேம்படுத்துவது, காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பது, யானைகள் தடுப்புக் காவலர்களைப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு பணிகளுக்காக கடந்த ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரூ.430.250 இலட்சமும், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு மாவட்டங்களுக்கு ரூ.519.166 இலட்சமும், ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு ரூ.222.285 இலட்சமும், காட்டுப் பகுதிகளுக்குள்ளே தீவனப் பயிர்கள் பயிரிட ரூ.20.87 கோடியும் வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் இருந்து வரும் இந்த யானைக் கூட்டங்களை வெளியேற்றுவதற்கு மயக்க மருந்து செலுத்தி பாதுகாப்பாக ஆனைமலை போன்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு முதற்கண் மைய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுபோன்ற யானைக் கூட்டங்களை வழிநடத்தி பாதுகாப்பான பகுதிகளுக்கு அனுப்பக்கூடிய பயிற்சி பெற்ற பணியாளர்கள் குழு முழுமையாக இப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[திரு. கே.டி. பச்சைமால்] [2012 ஏப்ரல் 26

கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூர் கோட்டம், சேரம்பாடி காவல் சுற்று, சேரங்கோடு சோதனைச் சாவடி அருகே திரு. லட்சுமணன் என்பவர் 17–4–2012 அன்று காலை 5–30 மணியளவில் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு இறந்துள்ளார். அவரது மனைவி மன நோயாளியாக இருப்பதாகக் கூறப்பட்டதால் அவரது மூத்த மகளான பிரியங்காவிடம் அரசின் உடனடி நிவாரணத் தொகையான ரூ.25,000 கூடலூர் மாவட்ட வன அலுவலரால் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கூடலூர் கோட்டாட்சியரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் உடனடி நிவாரண நிதி வழங்கிய விவரம் தெரியப்படுத்தப்பட்டது. யானைகள் மற்றும் காட்டு வன உயிரினங்களால் ஏற்படும் உயிர், பயிர் மற்றும் ஏனைய சேதாரங்களை முற்றிலும் களைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொதுமக்களிடமிருந்து எவ்வித கோரிக்கை மனுவும் பெறப்படவில்லை. வன உயிரினங்கள் நடமாட்டம் குறித்து சேகரிக்கப்படும் தகவல் அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சாலைகளிலே எச்சரிக்கைப் பலகை பொருத்தப்படுகின்றது. ஒலிபெருக்கி வசதி, டார்ச் விளக்கு வசதி ஏற்படுத்தப்பட்டு இரவு ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மனித வன உயிரின மோதலைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடலூர் கோட்டத்தில் ஒதுக்குக் காடுகள் மற்றும் ஒதுக்கு நிலங்கள் குறைவாக உள்ளதாலும், ஜென்ம நிலங்கள் மற்றும் தனியார் காடுகள் அதிக அளவில் உள்ளதாலும், மனித வன உயிரின மோதல் நிகழ்வு அடிக்கடி ஏற்படுகிறது. கூடலூர் ஜென்ம நிலங்கள் மற்றும் வன அமைவுப் பணிகள் நிலுவையில் உள்ளதால் மனித வன உயிரின மோதல் ஏற்படுகிறது.

2011–2012 ஆம் ஆண்டில் கூடலூர், நீலகிரி வடக்கு கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் காட்டு யானையால் தாக்கப்பட்டு 11 பேர் இறந்துள்ளனர். அதில் 9 நபர்கள் குடும்பத்தாரிடமிருந்து முழுமையான அளவில் நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில், இறந்தவர்களின் 9 வாரிசுதாரர்களுக்கு

2012 ஏப்ரல் 26] [திரு. கே.டி. பச்சைமால்]

ரூ.20.50 இலட்சமும், காயமடைந்த 18 நபர்களுக்கு ரூ.4.65 இலட்சமும், 23 பயிர் சேதார நிகழ்விற்கு ரூ.2.40 இலட்சமும், 9 உடைமைகள் சேதாரத்திற்கு ரூ.0.39 இலட்சமும், 33 கால்நடை சேதார நிகழ்வுகளுக்கு ரூ.2.13 இலட்சமும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வனம் அழிக்கப்பட்டு வனத்தினுடைய பரப்பளவு குறைந்துள்ளதாலும், வன விலங்குகளுக்குத் தேவையான குடிநீர் வசதி, தாவர தீவனப் பயிர்கள் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படாததால் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன விலங்குகளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண யானை தடுப்பு அகழிகள் போன்ற இடர் களைவுப் பணிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் 11.7 கோடி ரூபாயும், வன விலங்குகள், மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராமல் தடுப்பதற்கு வனப் பகுதியில் போதிய தீவனப் பயிர்களை வளர்க்க 2011–2012–ல் 20.87 கோடி ரூபாயும் வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர்ச் சேதம் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் இழப்பீட்டையும் இந்த அரசு உயர்த்தியுள்ளது. இழப்பீடு வழங்குவதில் தாமதம் ஏற்படாமல் இருக்க 2.5 கோடி ரூபாய் சுழல் நிதி ஒன்று உருவாக்கப்பட்டு, யானைத் தடுப்பு அகழிகள் போன்ற தடுப்பு அரண்கள் அமைப்பதற்கான கூடுதல் பணிகள் 2012–2013 இல் மேற்கொள்ளப்படும். இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் வராமல் தடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு சீரிய நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நீண்ட பதிலைக் கண்டு யானைகள் இனி ஊருக்குள்ளே வராது. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் செங்கம் தொகுதியில் யானை வந்து குடியிருப்பதாகச் சொன்னீர்கள். ஓடியிருக்கும். இனிமேல் வராது. (சிரிப்பு)*